## கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகம் - 2013

கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சற்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.
நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1 வருடம் முதல் 5 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய உபவேந்தர் நிதியத்திலிருந்தும் நாடகப் பீட அபிவிருத்தி நிதியத்திலிருந்து பல்கலைக்கழக நிதியத்திற்குக் கிடைக்கவேண்டிய ரூபா 799,147 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 46,417 தொகை மற்றும் களஞ்சியப் பொறுப்பாளரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 67,259 தொகைகளை உள்ளடக்கிய மொத்தப் பெறுமதி ரூபா 955,461 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் கல்விசார் பதவியணியினருக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 147,825,402 தொகையான சம்பளம் மற்றும் படிகளின் சரியான தன்மையைப் பரீட்சிப்பதற்காக கல்விசார் பதவியணியினரின் வருகைப் பதிவேடு மற்றும் விடுமுறைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) | மீளாய்வாண்டில் விபத்திற்குள்ளாகிய நான்கு வாகனங்கள் தொடர்பான ஆரம்ப விசாரணை அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | தொலை மற்றும் தொடர்ச்சியான கற்கை நிலையம் மற்றும் பட்டப்பின் படிப்புக் கற்கைப் பகுதிகளினால் தயாரிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திறைசேரி அங்கீகாரம் |

| | | |
|---|---|---|
| | | பெற்றுக்கொள்ளப்படாது நிதிக்குழுவின் சிபார்சு மற்றும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 614,000 மற்றும் 264,250 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை | கட்புல அரங்கேட்டற் கலைகள் பல்கலைக்கழகத்தின் பதவியணியினரான பீடாதிபதிகள், காசாளர் மற்றும் நூலகர் என்போருக்காக அலுவலகத்திலிருந்து வீடு வரை போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்குப் பதிலாக மாதாந்தம் ஒருவருக்கு ரூபா 30,000 தொகையான போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது 05 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 1,694,516 தொகையான போக்குவரத்துப் படி செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | பல்கலைகழகத்தின் நூலகப் புத்தகங்கள் தொடர்பாக 1984 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்து சேர்த்தல் பட்டோலையை நிலையான சொத்துப் பதிவேட்டுடன் ஒப்பிட்ட போது ரூபா 8,611,522 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. |

### 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

உபவேந்தரின் பிரயாணச் செலவுகள், உபவேந்தரினதும் பணிப்பாளர்கள் குழாத்திற்காகவும் (CVCD) ஆன செலவினங்கள் மற்றும் தொலை மற்றும் தொடர்ச்சியான கற்கைப் பகுதியில் பிரதான இணைப்பாளர் மற்றும் சுற்றாடல் கட்டுப்பாட்டாளர் என்போரின் தொலைபேசிச் செலவினமான ரூபா 348,051 தொகை போதியளவான அதிகாரமின்றிச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிமீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 18,668,242 தொகை பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,322,560 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டில் ரூபா 25,990,802 இனால் நிதிசார் விளைவுகளின் வீழ்ச்சிக்காக ஆளணி வேதனங்கள் ரூபா 61,104,977 இனாலும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகளும் ஏனைய செயற்பாட்டுச் செலவினமும் ரூபா 23,334,680 இனாலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கற்கைசார் செயலாற்றல்

கற்கை செயலாற்றல் தொடர்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறிக்கையின் படி பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களின் மாணவர்களின் பதிவு மற்றும் அவ்வருடங்களின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைதல் தொடர்பாக 05 கல்வியாண்டுகளுக்குரிய பொழிப்புத் தகவல்கள் பின்வருமாறு இருந்தது.

| கல்வி ஆண்டு | நாடகம் மற்றும் நடனக் கலைப் பீடம் | | | | சங்கீதப் பீடம் | | | | நுண் கலைகள் பீடம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த எண்ணிக்கை | சித்தியடைந்த சதவீதம் | பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த எண்ணிக்கை | சித்தியடைந்த சதவீதம் | பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை | பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | சித்தியடைந்த எண்ணிக்கை | சித்தியடைந்த சதவீதம் |
| 2007/2008 | 332 | 329 | 312 | 95 | 321 | 328 | 281 | 85 | 109 | 108 | 105 | 97 |
| 2008/2009 | 346 | 360 | 330 | 92 | 268 | 317 | 239 | 75 | 112 | 120 | 118 | 98 |
| 2009/2010 | 188 | 209 | 204 | 98 | 161 | 187 | 172 | 92 | 53 | 53 | 52 | 98 |
| 2010/2011 | 187 | 195 | 184 | 94 | 131 | 155 | 150 | 97 | 52 | 55 | 52 | 95 |
| 2011/2012 | 182 | 188 | 182 | 97 | 137 | 145 | 133 | 92 | 62 | 63 | 62 | 98 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 04 வருடங்களிற்குரிய நாடக மற்றும் நடனக்கலை மற்றும் நுண் கலை பீடங்களுடன் ஒப்பிடும் போது சங்கீத பீடத்தின் பரீட்சை சித்தியடைதல் சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2011/2012 கல்வியாண்டில் பரீட்சைப் பெறுபேறு 2014 யூன் 03 ஆம் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு மாணவருக்கான கிரயம்

பல்கலைக்கழகத்தில் முன்னைய ஆண்டில் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 221,110 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது ரூபா 256,779 ஆக இருந்தது. அதன் படி ஒரு மாணவருக்கான கிரயம் 16 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) ஆராய்ச்சிப் படி செலுத்துதல்

2011 ஏப்ரல் 07 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிரூபத்தின் பிரகாரம் ஆராய்ச்சிப் படி செலுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 15,539,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மூன்று பீடங்களின் விரிவுரையாளர்கள் மற்றும் நூலக உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 101 பேருக்கு மீளாய்ாவாண்டின் போது ஆராய்ச்சிப்படியாக ரூபா 18,371,618 தொகை செலுத்தப்பட்டிருந்தது.
இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நாடக மற்றும் நடனக் கலைப்பீடம்

நாடக மற்றும் நடனக் கலைப்பீடத்தின் ஆராய்ச்சி படிக்காக உரித்தினைப் பெற்ற 42 விரிவுரையாளர்களில் 2013 ஆம் ஆண்டில் தமது ஆராய்ச்சிகளைப் பூர்த்திசெய்த ஏழு விரிவுரையாளர்கள் மாத்திரம் இறுதி ஆராய்ச்சி அறிக்கை சமர்ப்பித்திருந்ததுடன் ஆராய்ச்சிகளைப் பூர்த்தி செய்த மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களும் மூன்று தகுதிகாண் விரிவுரையாளர்களும் கணக்காய்வுத் திகதி வரை இறுதி அறிக்கையை வழங்கியிருக்கவில்லை. எஞ்சிய 29 விரிவுரையாளர்களில் மீளாய்வாண்டிற்குரிய செயல்முன்னேற்றம் வழங்காத விரிவுரையாளர்களின் எண்ணிக்கை மூன்று ஆகும்.

(ii) சங்கீத கலைப் பீடம்

இந்தப் பீடத்தில் 2011 ஆம் ஆண்டிற்குரிய நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆராய்ச்சி செயற்பாடுகளில் மீளாய்வாண்டிற்குரிய செயல்முன்னேற்றம் 03 விரிவுரையாளர்களினால் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒரு தகுதிகாண் விரிவுரையாளர் 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டிற்குரிய ஆராய்ச்சிகளின் செயல்முன்னேற்றத்தை 2014 மார்ச் 31 ஆந் திகதி வரையும் சமர்ப்பித்திருக்கவில்லை.

(iii) நுண் கலைப்பிரிவு

நுண் கலைப்பிரிவில் 2011 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆராய்ச்சிகளில் மீளாய்வாண்டிற்குரிய செயல் முன்னேற்றங்களை வழங்கியிருக்காத விரிவுரையாளர்களின் எண்ணிக்கை 04 ஆக இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் எவ்வித ஆராய்ச்சி செயல்முன்னேற்றத்தையும் சமர்ப்பிக்காத விரிவுரையாளர்களின் எண்ணிக்கை மூன்றாகும்.

(ஈ) ஆராய்ச்சி விவாதம்

(i) 2013 ஆம் ஆண்டின் நவம்பர் 27 மற்றும் 28 ஆகிய இரு திகதிகளில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி விவாதத்திற்காக மூன்று பீடங்களிலிருந்தும் 16 விரிவுரையாளர்களிடமிருந்து மாத்திரமே ஆராய்ச்சிப் பொழிப்பு (Research Abstracts) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பல்கலைக்கழகங்களை சர்வதேச தரப்படுத்துவதற்குரிய நியமங்களின் படி, ஆராய்ச்சி நியமங்கள் முககியமானவையாக இருப்பதுடன் மேற்கூறப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் ஆராய்ச்சிக்கான ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பு என்பவை குறைந்த மட்டத்தில் உள்ளமை கண்டறியப்பட்டது. அதனால் 2013 இன் சர்வதேச தரப்படுதலின் பிரகாரம் கட்புல அரங்காட்டற் கலைகள் பல்கலைக்கழகம் 16,071 ஆவது இடத்தில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 2,117,041,000 தொகையான 06 காணிகள் தொடர்பான உரித்து இது வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூலகத்திலிருந்து வெளியே வழங்கப்பட்டு இது வரையும் மீளக் கையளிக்கப்படாத ரூபா 210,733 பெறுமதியான 382 புத்தகங்கள் காணப்பட்டன.

(இ) 2011/2012 நடனக் கலை தொடர்பான பொதுப் பட்டத்தின் செய்முறைப் பரீட்சை நடாத்தப்பட்ட தினங்களில் ஒரு விரிவுரையாளருக்கு பரிசோதனையாளராவும் பணிப்பாளராகவும் செயற்பட்டமைக்காக முறையே ரூபா 20,000 மற்றும் ரூபா 36,000 தொகையான படிகள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) புலமைப்பரிசில் வழங்கும் நோக்கத்தில் வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகளின் மூலம் உருவாக்கப்பட்ட 08 நிதியங்களுக்குரிய ரூபா 300,250 கூட்டுத்தொகையான பணம் மற்றும் அதன் வட்டி வருமானமான ரூபா 383,452 தொகை உரிய செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 228 ஆம் இலக்க வாடகை உடன்படிக்கையின் படி மாதாந்த வாடகைப் பணம் ரூபா 60,000 ஆன உபவேந்தர் உத்தியோகபூர்வ இல்லத்தின் வாடகைக் காலம் 2011 நவம்பர் 01 தொடக்கம் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையாக இருந்த போதிலும், காரணம் அறிவிக்கப்படாது உத்தியோகபூர்வ இல்லத்தின் வாடகைக் காலம் 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் முடிவுறுத்தப்பட்டு உபவேந்தர் தனது சொந்த வீட்டில் குடியிருந்து வருவதுடன் அந்த வீட்டிற்காக மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை உபவேந்தரின் பெயரிலுள்ள மின்சாரப்பட்டியலுக்காக ரூபா 81,232 தொகையும் இன்னுமொருவரின் பெயரிலுள்ள நீர் மற்றும் மின்சாரப்பட்டியலுக்காக ரூபா 147,629 தொகையும் பல்கலைக்கழகத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட தொழிலாளர் தரத்தின் ஒரு ஊழியர் மீளாய்வாண்டின் மே முதல் திசெம்பர் மாதம் வரை உபவேந்தரின் சொந்த வீட்டின் சேவைக்காக ஈடுபடுத்தி மாதத்திற்கு ரூபா 23,846 படி ரூபா 143,814 தொகையும் பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் ரூபா 22,991 தொகையான பங்களிப்புப் பணமும் பல்கலைக்கழகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஏப்ரல் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதிக சான்றுறுதிப்படுத்தலின் போது பல்கலைக்கழகத்தினால் மீளாய்வாண்டின் போது ரூபா 399,115 தொகை செலவில் உற்பத்தி செய்யப்பட்ட இந்துவற என்ற பெயரிலான 919 சங்கீத இறுவெட்டுக்கள் களஞ்சியத்தின் இருப்புப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் விற்பனை செய்யப்படாது காணப்படுகின்றமையினால் அதற்காக செய்யப்பட்ட செலவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பிரதான ஒழுக்காற்று உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு 04 செய்திப் பத்திரிகை அறிவித்தலுக்காக ரூபா 99,552 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த போதும் இந்தப் பதவியை நிரப்புவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நிலையங்களுக்கு அமர்ந்தும் ஆரம்ப திட்டம் தயாரிக்கப்படாமல் உள்ளக பாதுகாப்பு சேவைக்காக முன்னர் இருந்த 06 பேர்களுக்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டில் பாதுகாப்பு பரிசோதகர் மற்றும் பாதுகாப்பு படையின் எட்டு உத்தியோகத்தர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 15 நிரந்தர பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக ரூபா 3,563,559 தொகையான சம்பளம் மற்றும் படிகள் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே உள்ளக பாதுகாப்பு சேவையொன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் உடன்படிக்கை செய்யப்பட்ட பாதுகாப்பு சேவைக்காக ரூபா 23,514,350 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன.

**4.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விடுதி நிர்மாண செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 மே 10 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட தெஹிவளை ஆண்கள் விடுதி செயற்திட்டம் 2013 திசெம்பர் 27 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஏப்ரல் 24 கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிதிசெயலாற்றல் 48.23 சதவீதமும், பௌதிக செயலாற்றல் 60 சதவீதமுமாக இருந்தது.

(ii) இராஜகிரிய பெண்கள் விடுதி நிர்மாண செயற்திட்டம் 2011 மே 12 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 540 கலண்டர் நாட்களில் வேலை பூர்த்திசெய்ய வேண்டியிருந்தது. மீண்டும் 2014 சனவரி 23 ஆந் திகதி வரை திகதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஏப்ரல் 24 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

மீளாய்வாண்டின் இறுதியில் இந்த செயற்திட்டத்தின் நிதி செயலாற்றல் 31.9 சதவீதமும் பௌதிக செயலாற்றல் 70 சதவீதமுமாக இருந்தது. அதன் பிரகாரம் தற்போது இந்த செயற்திட்டம் அண்ணளவாக 1 1/2 வருட காலம்

தாமதமடைந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் போது விடுதி வாடகையாக ரூபா 15,901,946 தொகையைச் செலவிட வேண்டியிருந்தது.

(ஆ) நிருவாகக் கட்டிட நிர்மாண செயற்திட்டம் ரூபா 94.65 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் 2012 சனவரி 14 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013 சனவரி 14 ஆந் திகதி பூர்த்தி செய்யவேண்டிய போதிலும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தாமதமடைந்த காரணத்தினால் 2013 ஒக்தோபர் 17 ஆந் திகதி வரை இரண்டாவது தடவையாகவும் திகதி நீடித்திருந்த போதிலும் 2014 ஏப்ரல் 24 கணக்காய்வுத் திகதி வரையிலும் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயல்முன்னேற்றத்தைக் கவனத்தில் கொள்ளும் போது செலவினம் ரூபா 42 மில்லியன் ஆனமையால் நிதிசார் செயலாற்றல் 44.26 சதவீதமும் பௌதிக செயலாற்றல் 70 சதவீதமாக இருந்தது.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினரை ஒப்பீடு செய்த போது வெற்றிடம் 55 ஆகவும் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 04 ஆகவும் இருந்தன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத ''மாதிரி வடிவ ஊழியர்'' பதவிக்காக நுண்கலைக் கற்கைப் பீடத்தின் தேவைக்காக வருடாந்த உடன்படிக்கையில் ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களைச் சேர்த்து தொடர்ச்சியாக சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் 08 ஊழியர்களுக்காக ரூபா 1,341,800 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

பல்கலைக்கழகத்தினால் 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 07 பிரதான நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,333 மில்லியனாகும். எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்ளும் பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றங்களை மதிப்பிடுவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்பட்ட போது 50 சதவீதம் தொடக்கம் 2,058 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) காசும் வங்கியும்
(உ) நூலகப் புத்தகம்
(ஊ) கொள்வனவு